## அரசகரும மொழிகள் ஆணைக்குழு - 2015

---

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------------

நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------------------

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்தொன்றின் நியாயப் பெறுமதி, அதன் தேறிய பெறுமதியில் பொருண்மையானதாக மாற்றமடையும் போது மீள் கணிப்பீடு செய்து மீள் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,638,765 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும் ஆணைக்குழுவினால் தற்போது பயப்படுத்தப்படுகின்ற ரூபா 585,730 தொகையான நிலையான சொத்துக்கள் மீள் கணிப்பீடு செய்து நியாயப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சினால் ஆணைக்குழுவிற்கு உரித்து கையளிக்கப்பட்டு தற்போது ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் மீள் கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நன்கொடையாகக் கிடைத்த 22 அலுவலக உபகரண விடயங்களும் பெறுமதி இடப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 106,344 கூட்டுத்தொகையான இடர் கடன், செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்.

----------------------------------------------------------------------------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 820,359 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,985,071 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,805,430 இனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது மொத்த செலவினம் ரூபா 2,464,134 இனால் அதிகரித்திருந்த போதிலும், மொத்த வருமானம் ரூபா 6,269,564 இனால் அதிகரித்தமை அதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் மிகையொன்று காணப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது பாரிய பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. அந்த பற்றாக்குறை 2013 ஆம் ஆண்டிலிருந்து சீராகக் குறைவடைந்து 2015 ஆம் ஆண்டின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது ஆணைக்குழுவின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அதிகரித்து வந்ததுடன் அதனை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் 104 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியம் ரூபா 7,468,000 இனால் அதிகரித்தமை மற்றும் ஒட்டு மொத்த செலவினத்தை விஞ்சி ரூபா 576,000 அரசாங்க மானியம் வழங்கப்பட்டமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1991 இன் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

* அரசகரும மொழிகளின் பாவனை தொடர்பாக கொள்கை ரீதியான தத்துவங்களை சிபாரிசு செய்தலும் மேற்பார்வையிடலும்.

* மொழிப்பாவனை அரசியலமைப்பின் IV பந்திக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றமையை கண்காணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

* அரசகரும மொழி மதிப்பீட்டை ஊக்குவித்தல்

* மொழிப் பாவனை தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்காக புலனாய்வுகளை மேற்கொள்ளலும் மீள் நடவடிக்கை எடுத்தலும்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பவற்றைப் பரீட்சித்த போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 38 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத்

திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 26 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது அரசகரும மொழிக் கொள்கையை மீறுதல் தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற 91 முறைப்பாடுகளில் 45 முறைப்பாடுகளை ஆண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) இரு மொழி நிர்வாகப் பிரிவில் கணக்காய்விற்குள்ளாக்கப்படாத 50 அரசாங்க நிறுவனங்களை கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 22 நிறுவனங்களின் மொழிகளைக் கணக்காய்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறவிடப்பட்டிருந்தது.

(ஈ) சமூக ஒருங்கிணைப்பு வாரத்தில் பாடசாலை மாணவர்களிற்காக "அரசகரும மொழிகள் / தேசிய மொழிகள் தொடர்பாக சிறந்த மனப்பான்மையை ஏற்படுத்துதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அந்த நிகழ்ச்சிதிட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 இனங்காணப்பட்ட நட்டம்

ஊழியர் சேமலாப நிதியம் குறித்த திகதியில் உள்ளவாறு அனுப்பி வைக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 77,213 தொகையான மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தின் போது ரூபா 43,024 தொகை செலவிடப்பட்டு கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேற்றுத் தரமற்ற 6 பதவிகள் வெற்றிடமாக இருந்தமையின் காரணமாக நிறுவனத்தின் நோக்கங்களை போதியளவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் கடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலமேனும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

30 உத்தியோகத்தர்கள் அளவில் சேவையாற்றுகின்ற ஆணைக்குழுவிற்காக தேவைக்கு மேலதிகமாக 6000 சதுர அடியினையுடைய மூன்று மாடிக்கட்டிடமொன்று 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 450,000 தொகையான மாதாந்த வாடகையில் பெறப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்தின் கீழ்த்தளம் 2016 மே மாதம் வரையில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் மூன்றாவது மாடியில் கேட்போர்கூடமொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதில் எந்த நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் சுருக்கமாக |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | 3 ஆண்டுகளுக்கு அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை சொத்துக்கள் மீள் கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, அமைச்சிலிருந்து கையளிக்கப்பட்ட வாகனத்தை கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) | பதவியணியினர் கட்டுப்பாடு | சில பதவிகள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டமை. |